செ.வெ.எண்: 642 நாள்: 05.11.2020

**விவசாயிகளின் மானாவாரி நிலங்களில் உற்பத்தியைப் பெருக்க ரூ.4.25 கோடி ஒதுக்கீடு.**

**கூட்டுப் பண்ணையத் திட்டத்தின் கீழ் உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்க ரூ.2.80 கோடி நிதி ஒதுக்கீடு.**

**பாரம்பரிய அங்கக வேளாண்மை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு ரூ.1.67 கோடி வழங்கப்பட்டுள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார்கோவில் வட்டாரம், பாரதிபுரம் கிராமத்தில் வேளாண்மைத் துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டார். பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வேளாண்மைத் துறையின் மூலம் விவசாயிகளின் வருமானத்தை 3 மடங்காக்கும் வகையில் எண்ணற்ற வேளாண் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரை ஆண்டு சராசரி மழையளவு 758.2 மி.மீ. ஆகும். அக்டோபர் மாதம் வரை பெறப்பட வேண்டிய இயல்பான அளவான 545.6 மி.மீக்கு 578.9 மி.மீ அளவு மழை பெறப்பட்டு 6 சதவீத மழை கூடுதலாக பெறப்பட்டுள்ளது.

நடப்பாண்டு செப்டம்பர் மாதம் முடிய நெல் 69,001 எக்டர் பரப்பளவிலும், சிறுதானியங்கள் 1,994 எக்டர் பரப்பளவிலும், பயறுவகைப் பயிர்கள் 1,829 எக்டர் பரப்பளவிலும், எண்ணெய்வித்து 8,551 எக்டர் பரப்பளவிலும், கரும்பு 1,238 எக்டர் பரப்பளவிலும், பருத்தி 30 எக்டர் பரப்பளவிலும், தென்னை 10,795 எக்டர் பரப்பளவிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது மாவட்டத்திலுள்ள 33 வேளாண்மை விரிவாக்க மையங்களில் 231.760 மெ.டன் சான்று பெற்ற நெல் விதைகளும், 45.27 மெ.டன் பயறு விதைகளும், நிலக்கடலை 38.62 மெ.டன், சிறுதானியங்கள் 13.065 மெ.டன், எள் விதைகள் 4.046 மெ.டன் விதைகளும் இருப்பில் உள்ளது. விவசாயிகள் தரமான சான்று பெற்ற விதைகளை வேளாண்மை விரிவாக்க மையங்களில் பெற்று பயனடையலாம்.

தமிழ்நாடு நிலைக்கத்தக்க மானாவாரி வேளாண்மை வளர்ச்சி இயக்கத் திட்டத்தின் மூலம் விவசாயிகளின் மானாவாரி நிலங்களில் உற்பத்தியைப்

பெருக்கும் வகையில் நடப்பாண்டு 10 ஆயிரம் எக்டர் மானாவாரி நிலங்களில் ரூ.4.25 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விவசாயிகள் ஆண்டு முழுவதும் வருமானம் பெற 400 பண்ணை குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ.2.40 கோடி நிதி ஒதுக்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றுவதற்கான சிறப்பு தொகுப்பு திட்டம் நடப்பாண்டில் 500 எக்டர் பரப்பளவில் ரூ.48.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதேபோன்று கூட்டுப் பண்ணையத் திட்டத்தின் கீழ் 56 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் அமைப்பதற்கு ரூ.2.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அங்கக வேளாண்மை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக 3 ஆண்டுகளுக்கு மொத்தம் ரூ.31,000 வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் புதுக்கோட்டை, அன்னவாசல், குன்றாண்டார்கோவில் ஆகிய வட்டாரங்களில் 25 தொகுப்புகளாக செயல்படுத்தப்பட்டு வருவதுடன் கடந்த 2 ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ரூ.1.67 கோடி வழங்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் பிரதம மந்திரியின் நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தின் கீழ் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி கூடுதல் பரப்பில் சாகுபடி செய்திடும் வகையில் சொட்டுநீர்ப் பாசனம், தெளிப்புநீர்ப் பாசனம் மேற்கொள்ள சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன. நடப்பு ஆண்டு மாவட்டத்தில் 4,560 எக்டரில் நுண்ணீர் பாசனம் அமைக்க ரூ.18.68 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு இதுவரை ரூ.7.75 கோடி மதிப்பீட்டிற்கு பணியானை வழங்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகள் பயன் பெறும் வகையில் தமிழக அரசால் செயல்படுத்தி வரும் வேளாண் திட்டங்களை விவசாயிகள் உரிய முறையில் பெற்று பயன் பெற வேண்டும். மேலும் இது குறித்த கூடுதல் தகவல்களுக்கு விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வேளாண் இணை இயக்குநர் சிவக்குமார், துணை இயக்குநர் பெரியசாமி, இயற்கை விவசாயி தனபதி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**